மாலை தமிழகம்
6 சென்னை 20-11-2018

# 79 வயது மூதாட்டிக்கு இதய வால்வு மாற்றம்
# ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனை புது சாதனை



சென்னை, நவ. 20-

சென்னை போரூரில் உள்ள ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ மையத்தில், 79 வயது மூதாட்டிக்கு இதயத்தில் உள்ள வால்வு பாதிக்கப்பட்டதால் ஊடுருவல் சிகிச்சை முறையில் வால்வு மாற்றம் செய்து மருத்துவர்கள் புதிய சாதனை படைத்துள்ளனர்.

79 வயது மூதாட்டி ஒருவருக்கு இதயத்தில் முக்கிய வால்வு கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அதே நேரத்தில் இதயத்திற்கு போகும் முக்கியமான ரத்தக்குழாயும் கடுமையான அடைப்பு ஏற்பட்டு இருந்தது. இந்த இரண்டு பிரச்சனைகளுமே ஒரே நேரத்தில் வந்தால் சில வினாடிகளில் மரணம் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. இதுவரை இத்தனை அறுவை சிகிச்சை மூலம்தான் தீர்வு செய்து வந்தனர். இந்த அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கு ஒரு பெரிய சவாலாக இருந்தது. சில நேரங்களில் கடுமையான பின்விளைவுகளால் நோயாளிக்கும் மரணம் கூட ஏற்படலாம்.

ஆனால் ஸ்ரீ ராம்ச்சந்திரா மருத்துவமனை மைய இதய நோய் நலப் பிரிவைச் சேர்ந்த டாக்டர்கள் டி.ஆர்.முரளிதரன், பி.நாகேந்திர பூபதி, ரஞ்சித், வினோத்குமார் இவர்களின் கூட்டு முயற்சியால் தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக இந்த அறுவை சிகிச்சை ஏதும் இன்றி தொடையில் இருக்கும் ரத்த குழாயில் நுண்துளை அறுவை சிகிச்சை மூலம் அடைப்பை நீக்கியதோடு மட்டுமல்லாமல் ஒரே நேரத்தில் ஒரு புதிய வால்வையும் பொருத்தி சாதனை செய்துள்ளனர்.

இரண்டு சிகிச்சைகளும் ஒரே நேரத்தில் செய்தது தென்னிந்தியாவின் முதல் முறையாகும். நோயாளி குணமடைந்து மூன்று நாட்களில் வீடு திரும்பியுள்ளார். இந்த அரிய சாதனை மூலம் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ மையம் தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக புதிய சாதனையை செய்துள்ளது. இதன் மூலம் வருங்காலங்களில் இது போன்ற சிகிச்சை செய்ய ஏதுவாக இருக்கும். மேலும் மருத்துவர்கள் கூறும்போது, 'இளம் வயதினராக இருந்தால் அறுவை சிகிச்சை மூலம் செய்திருக்கலாம். 70 வயதை தாண்டியதால் இந்த முயற்சியை எடுத்தோம். மேலும் இவருக்கு பொருத்தமான வால்வை அமெரிக்காவிலிருந்து பெற்று பொருத்தி உள்ளோம்' என்றனர்.